PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# கொன்னக்கோல்: தென்னிந்திய லய வாய்மொழிக் கலையின் வரலாற்றுப் பரிணாமமும் இலக்கியச் சான்றுகளும் – ஓர் ஆய்வு

**உமா பி[1] & முனைவர் லக்ஷ்மி ராமஸ்வாமி[2]**

**[1] ஆராய்ச்சி மாணவி, [2] இணைப்பேராசியர்**

**இசை மற்றும் நுண்கலைத் துறை**

**பண்டைய இந்திய ஆய்வுகள் மற்றும் நுண்கலைப் பள்ளி,**

**வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட ஆய்வு நிறுவனம்**

**(Vels Institute of Science, Technology & Advanced Studies – VISTAS),**

**பல்லாவரம், சென்னை – 600 117**

**ஆய்வுச் சுருக்கம்**

கொன்னக்கோல் தென்னிந்தியச் செவ்வியல் இசை மரபில், குறிப்பாக கர்நாடக இசையும் பரதநாட்டியமும் சார்ந்த கலைப் பரப்பில், முக்கியத்துவம் வாய்ந்த தனித்துவமான வாய்மொழி லயக் கலையாகத் திகழ்கிறது. தாளக் கருவிகளில் எழும் ஒலிகளை மனிதக் குரலின் மூலம் லயச் சொற்கட்டுகளாக வெளிப்படுத்தும் இக்கலை, ஆரம்பத்தில் தாளக் கலைஞர்களுக்கான பயிற்சி முறையாகவும் கற்பித்தல் வழிமுறையாகவும் பயன்பட்டது. பின்னர் காலப்போக்கில் அது தனித்துவமான மேடை நிகழ்கலையாக உருமாறி இசை உலகில் சிறப்பான இடத்தைப் பெற்றது. இவ்வாய்வு, கொன்னக்கோலின் வரலாற்று வேர்கள் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியை பண்டைய இலக்கியச் சான்றுகள், பாரம்பரிய இசை மரபுகள் மற்றும் தாளக் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்கிறது. மேலும், சொல்கட்டு, லய அமைப்புகள் மற்றும் தாளச் சுற்றுகள் (தாளம்) போன்ற கொன்னக்கோலின் இலக்கண மற்றும் கோட்பாட்டு அம்சங்களையும் இக்கட்டுரை விளக்குகிறது. இதனுடன், சமகால இசை உலகில் கொன்னக்கோல் பெற்றுள்ள புதிய பரிமாணங்களையும், உலக இசை மேடைகளில் பல்வேறு இசை வடிவங்களுடனான அதன் இணைப்புகளையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. இதன்வழி, பாரம்பரிய லயப் பயிற்சி முறையாகத் தொடங்கிய கொன்னக்கோல், காலப்போக்கில் வளர்ச்சி பெற்று இன்று உலகளாவிய இசைத் தளத்தில் குறிப்பிடத்தக்க கலை வடிவமாக உயர்ந்திருப்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**முக்கியச் சொற்கள்:** கொன்னக்கோல், கர்நாடக இசை, சொல்கட்டு, லயம், தாள அமைப்பு, பரதநாட்டியம், தென்னிந்திய இசை மரபு

**முன்னுரை**

இந்திய இசை மரபில் லயம் என்பது காலத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட ஓட்டமாகக் கருதப்படுகிறது. இசை, நடனம் மற்றும் தாளக் கலைகளின் அடிப்படைக் கூறாக விளங்கும் லயம், ஒரு இசைப் படைப்பின் அமைப்பையும் ஒழுங்கையும் நிர்ணயிக்கும் முக்கிய அம்சமாகும். இசையின் அடிப்படை கூறுகளான சுருதி மற்றும் லயம் ஆகிய இரண்டும் இசையின் முழுமையான வடிவமைப்பை உருவாக்குகின்றன. இதனை விளக்கும் வகையில் பண்டைய இசை அறிஞர்கள் கூறிய “சுருதி மாதா, லய பிதா” என்ற பொன்மொழி இசையில் சுருதியும் லயமும் கொண்டுள்ள அடிப்படை முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அதாவது, சுருதி இசையின் தாயாகவும் லயம் இசையின் தந்தையாகவும் கருதப்படுகிறது. இவ்விரண்டும் இணைந்து செயல்படும் போது தான் ஒரு இசைப் படைப்பு முழுமையான இசை வடிவத்தை அடைகிறது (ராமநாதன், 2018).

இந்த லய அமைப்புகளை இசைக்கருவிகள் இன்றி மனிதக் குரலின் மூலம் ஒலிச் சொற்களாக வெளிப்படுத்தும் கலை வடிவமே கொன்னக்கோல் எனப்படுகிறது. தாளக் கருவிகளில் உண்டாகும் ஒலிகளை நாவன்மையால் உருமாற்றி சொல்லும் இந்த வாய்மொழிக் கலை, தென்னிந்திய செவ்வியல் இசை மரபில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. கொன்னக்கோலில் பயன்படுத்தப்படும் “த க தி மி (Tha Ka Dhi Mi)”, “த கி ட (Tha Ki Ta)”, “த க ஜு நு (Tha Ka Ju Nu)” போன்ற ஒலிச் சொற்கள் சொல்கட்டு (Solkattu) என அழைக்கப்படுகின்றன. இச்சொற்கள் தாள அமைப்புகளையும் லயப் பிரிவுகளையும் விளக்கும் அடிப்படை கூறுகளாகும். எனவே, கொன்னக்கோல் பெரும்பாலும் “வாய்மொழி மிருதங்கம்” என்றும் குறிப்பிடப்படுகிறது (Nelson, 1991; Brown, 1965).

கொன்னக்கோலின் அடிப்படை அமைப்பு தாளம் மற்றும் லய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். கர்நாடக இசையில் காணப்படும் சதுஸ்ர, திஸ்ர, கண்ட, மிஸ்ர, சங்கீர்ணம் போன்ற ஜாதி அமைப்புகள் மற்றும் ஆதி தாளம், ரூபக தாளம், மிஸ்ர சாபு தாளம், கண்ட சாபு தாளம் போன்ற தாளச் சுற்றுகள் அனைத்தும் கொன்னக்கோலில் சொல்கட்டு வடிவில் வெளிப்படுகின்றன. உதாரணமாக, சதுஸ்ர லயத்தில் “த க தி மி”, திஸ்ர லயத்தில் “த கி ட”, கண்ட லயத்தில் “த க த கி ட” போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு தாள அமைப்புகளை எளிதாக புரிந்து கொள்ளவும், லய கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளவும் கொன்னக்கோல் ஒரு முக்கியமான பயிற்சி முறையாகக் கருதப்படுகிறது (Mangudi Durairaj Iyer, 2009; Somaskandha Sharma, 2019).

மேலும், கொன்னக்கோலின் வரலாற்று வேர்கள் பண்டைய இந்திய மற்றும் தமிழ் இலக்கிய மரபுகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. பரத முனிவர் இயற்றிய நாட்டிய

ISSN: 2582-9513

சாஸ்திரம் (Natya Shastra) என்னும் நூலில் தாள அமைப்புகள், லயச் சுழற்சிகள் மற்றும் இசை–நடனக் கோட்பாடுகள் பற்றிய விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன (பரத முனி). அதேபோன்று, சிலப்பதிகாரம் போன்ற பாரம்பரிய தமிழ் இலக்கியங்களில் இசை, நடனம் மற்றும் தாள அமைப்புகள் பற்றிய பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன (இளங்கோ அடிகள்). இவ்வகை இலக்கியங்கள் தென்னிந்திய இசை மரபின் அடிப்படைத் தத்துவங்களையும் லயக் கலையின் தொன்மையான பரம்பரையையும் வெளிப்படுத்துகின்றன.

இதனைத் தொடர்ந்து, யாழ் நூல் போன்ற தமிழ் இசை இலக்கண நூல்கள் தென்னிந்திய இசை மரபில் இசை மற்றும் தாள அமைப்புகளின் வளர்ச்சியை விளக்குகின்றன (விபுலானந்தர், 1947). இந்நூல் தமிழிசையின் அமைப்பு, இசைக்கருவிகள் மற்றும் தாளக் கோட்பாடுகள் பற்றிய முக்கியமான விளக்கங்களை வழங்குகிறது.

அட்டவணை 1: கொன்னக்கோலின் வரலாற்று வளர்ச்சி – காலவரிசை

| **காலப்பகுதி** | **முக்கிய நூல் / ஆதாரம்** | **முக்கிய அம்சங்கள்** | **கொன்னக்கோல் வளர்ச்சியுடன் தொடர்பு** |
|---|---|---|---|
| கி.மு. 200 – கி.பி. 200 | நாட்டிய சாஸ்திரம் (பரத முனி) | தாளம், லயம், கால அளவு மற்றும் இசை–நடன ஒத்திசைவு பற்றிய அடிப்படை கோட்பாடுகள் | லயக் கோட்பாடுகளின் அடித்தளம் உருவாக்கப்பட்டது (பரத முனி) |
| 5–8 ஆம் நூற்றாண்டு | தமிழ் இலக்கியங்கள் மற்றும் இசை மரபுகள் | இசை, நடனம் மற்றும் தாளக் கூறுகள் பற்றிய ஆரம்ப குறிப்புகள் | தென்னிந்திய கலை மரபில் லய அமைப்புகளின் வளர்ச்சி |
| 13 ஆம் நூற்றாண்டு | சங்கீத ரத்நாகரம் (ஷார்ங்கதேவரர்) | தாள வகைகள், லய அமைப்புகள் மற்றும் இசைக் கோட்பாடுகள் | லய அமைப்புகளின் முறையான வகைப்பாடு உருவாக்கப்பட்டது |
| 15 ஆம் நூற்றாண்டு | திருப்புகழ் (அருணகிரிநாதர்) | சிக்கலான சந்தக் கட்டமைப்புகள் மற்றும் லய அமைப்புகள் | லய உணர்வு மற்றும் சந்தப் பயிற்சிக்கு முக்கிய பங்களிப்பு |
| 19–20 ஆம் நூற்றாண்டு | கர்நாடக இசை மரபு – மிருதங்கப் பயிற்சி | சொல்கட்டு மற்றும் வாய்மொழி லயப் பயிற்சி | கொன்னக்கோல் மிருதங்கக் கலைஞர்களின் பயிற்சி முறையாக பரவியது |
| 1904 | சங்கீத சம்பிரதாய பிரதர்ஷினி (சுப்பரம தீக்ஷிதர்) | தாளம் மற்றும் இசை அமைப்புகளின் எழுத்து பதிவு | வாய்மொழி மரபு மற்றும் எழுத்து மரபு இணைப்பு |

| | | | |
|---|---|---|---|
| 20 ஆம் நூற்றாண்டு | மிருதங்கக் கலைஞர்கள் – லயப் பயிற்சி மரபு | சொல்கட்டு மற்றும் தாள அமைப்புகளின் விரிவான பயன்பாடு | கொன்னக்கோல் தனித்துவமான மேடை கலை வடிவமாக வளர்ச்சி |
| 20 ஆம் நூற்றாண்டின் இறுதி | திருச்சி சங்கரன், காரைக்குடி ஆர். மணி போன்ற கலைஞர்கள் | லயக் கோட்பாடுகள், தன்னிச்சை (improvisation) மற்றும் மேடை நிகழ்ச்சிகள் | கொன்னக்கோல் உலக இசை மேடைகளில் அறிமுகம் |
| 21 ஆம் நூற்றாண்டு | பன்னாட்டு இசை கலைஞர்கள் (Pete Lockett, B. C. Manjunath) | உலக இசை, ஜாஸ் மற்றும் கலப்பு இசை வடிவங்களுடன் இணைப்பு | கொன்னக்கோலின் பன்னாட்டு பரவல் மற்றும் கல்வி பரவல் |

கொன்னக்கோலின் வரலாற்று வளர்ச்சி இந்திய இசை மற்றும் நடன மரபுகளின் தொன்மையான கோட்பாடுகளுடன் தொடர்புடையதாகும். நாட்டிய சாஸ்திரம் போன்ற பண்டைய நூல்கள் தாளம் மற்றும் லய அமைப்புகளுக்கான அடிப்படை கோட்பாடுகளை வழங்கின (பரத முனி). பின்னர் சங்கீத ரத்நாகரம் போன்ற இசை இலக்கண நூல்கள் லய அமைப்புகளை முறையாக வகைப்படுத்தின. இவ்வகை வரலாற்று வளர்ச்சியின் காலவரிசை அட்டவணை 1-ல் காட்டப்பட்டுள்ளது. மத்தியகாலத்தில் அருணகிரிநாதரின் திருப்புகழ் போன்ற பாடல்களில் காணப்படும் சிக்கலான சந்த அமைப்புகள் லயப் பயிற்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கின. இதனைத் தொடர்ந்து, கர்நாடக இசை மரபில் மிருதங்கக் கலைஞர்கள் தாள அமைப்புகளை கற்றுக்கொடுக்கும் ஒரு வாய்மொழி முறையாக சொல்கட்டு மற்றும் கொன்னக்கோலை பயன்படுத்தத் தொடங்கினர்.

இருபதாம் நூற்றாண்டில் பல மிருதங்கக் கலைஞர்கள் கொன்னக்கோலை மேடை கலை வடிவமாக வளர்த்தனர். குறிப்பாக திருச்சி சங்கரன் மற்றும் காரைக்குடி ஆர். மணி போன்ற கலைஞர்கள் உலக இசை மேடைகளில் இதனை அறிமுகப்படுத்தினர். இன்றைய காலத்தில், B. C. Manjunath மற்றும் Pete Lockett போன்ற கலைஞர்களின் முயற்சியால் கொன்னக்கோல் உலகளாவிய இசை மற்றும் கற்பித்தல் முறைகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மிருதங்க வாசிப்பு மரபில் தாளக் கோட்பாடுகள் மற்றும் லய அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை பாலசுப்ரமணியம் (2019) தனது ஆய்வில் விளக்குகிறார். குறிப்பாக மிருதங்க வாசிப்பில் சொல்கட்டு பயன்பாடு, தாள அமைப்புகளை எளிதாகப் புரிந்து கொள்ளவும் பயிற்சி பெறவும் உதவுகின்றது என அவர் குறிப்பிடுகிறார்.

அதேபோல், கர்நாடக இசையில் தாளம் மற்றும் லயப் பயிற்சி முறைகள் குறித்து சந்திரசேகரன் (2020) தனது ஆய்வில் விரிவாக விவரிக்கிறார். அவரின் ஆய்வு தாளக் கோட்பாடுகள் இசைக் கற்றலில் எவ்வாறு அமைப்புடனும் முறையாகவும் கற்பிக்கப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது. மேலும், கர்நாடக இசைக் கச்சேரிகளில்

ISSN: 2582-9513

மிருதங்கத்தின் பங்கு மற்றும் அதன் லய அமைப்புகளின் முக்கியத்துவம் குறித்து கிரிதரன் சர்மா (2022) தனது ஆய்வில் விளக்குகிறார். இவ்வாய்வு தாளக் கருவிகள் மற்றும் லயக் கட்டமைப்புகள் இசை நிகழ்ச்சிகளில் எவ்வாறு முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

காலப்போக்கில், கொன்னக்கோல் தாளக் கலைஞர்களுக்கான பயிற்சி முறையைத் தாண்டி தனித்துவமான மேடை கலை வடிவமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. கர்நாடக இசைக் கச்சேரிகளில் மிருதங்கம், கஞ்சிரா, கதம், மோர்சிங் போன்ற தாளக் கருவிகளுடன் இணைந்து கொன்னக்கோல் நிகழ்த்தப்படுவதைக் காணலாம். குறிப்பாக மிருதங்கக் கலைஞர்கள் தங்களின் லய நுணுக்கங்களை வெளிப்படுத்தும் போது கொன்னக்கோலை ஒரு முக்கியமான கருவியாகப் பயன்படுத்துகின்றனர் (Trichy Sankaran, 1994).

சமகாலத்தில், கொன்னக்கோல் உலக இசை மேடைகளிலும் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது. ஜாஸ், உலக இசை மற்றும் பரிசோதனை இசை வடிவங்களுடன் இணைந்து இது புதிய பரிமாணங்களை அடைந்துள்ளது. இதன் மூலம், பாரம்பரிய லயப் பயிற்சி முறையாகத் தொடங்கிய கொன்னக்கோல் இன்று உலகளாவிய இசை மரபில் தனித்துவமான கலை வடிவமாக உருவெடுத்துள்ளது. இவ்வாறு, லயக் கோட்பாடுகளின் வாய்மொழி வெளிப்பாடாக விளங்கும் கொன்னக்கோல், தென்னிந்திய இசை மரபின் ஒரு முக்கியமான பாரம்பரியக் கலையாகத் திகழ்கிறது. அதன் வரலாற்று வேர்கள், இலக்கியச் சான்றுகள், தாள அமைப்புகள் மற்றும் நவீன கால வளர்ச்சிகள் ஆகியவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**பண்டைய இலக்கியங்களில் கொன்னக்கோலின் மேன்மை**

கொன்னக்கோல் என்ற சொல் நவீன காலத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், அதன் அடிப்படைத் தத்துவங்கள் இந்திய இசை மற்றும் நடன மரபின் தொன்மையான இலக்கியங்களில் காணப்படுகின்றன. பரத முனிவர் இயற்றிய நாட்டிய சாஸ்திரம் தாளம், லயம் மற்றும் கால அளவுகள் பற்றிய அடிப்படை கோட்பாடுகளை வழங்குகிறது (பரத முனி). பின்னர் ஷார்ங்கதேவரர் இயற்றிய சங்கீத ரத்நாகரம் தாள வகைகள் மற்றும் லய அமைப்புகளை முறையாக வகைப்படுத்தியது. தமிழ் இலக்கிய மரபில் சிலப்பதிகாரம் இசை, நடனம் மற்றும் தாளக் கூறுகள் பற்றிய பல குறிப்புகளை வழங்குகிறது (இளங்கோ அடிகள்). அதேபோல், அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களில் காணப்படும் சிக்கலான சந்த அமைப்புகள் லயப் பயிற்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. மேலும், யாழ் நூல் போன்ற இசை இலக்கண நூல்கள் தென்னிந்திய இசை மரபில் தாள மற்றும் லய அமைப்புகளின் வளர்ச்சியை விளக்குகின்றன (விபுலானந்தர், 1947). இவ்வகை இலக்கியச் சான்றுகள், லயத்தை வாய்மொழியாக வெளிப்படுத்தும் மரபு பண்டைய காலத்திலிருந்தே

நிலவியதை காட்டுகின்றன; இது பின்வரும் காலங்களில் கொன்னக்கோல் எனப்படும் தனித்துவமான லய வாய்மொழிக் கலையாக வளர்ச்சியடைந்தது.

**சிலப்பதிகாரம் (சங்க காலம்)**

தமிழ் இலக்கியங்களில் இசை மற்றும் லயக் கூறுகளை விளக்கும் முக்கியமான ஆதாரமாக இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் விளங்குகிறது. குறிப்பாக அரங்கேற்று காதை பகுதியில், மாதவி அரங்கேற்றம் செய்யும் போது இசைக்கருவிகள் ஒருங்கிணைந்து ஒலிக்கும் விதம் விரிவாக விளக்கப்படுகிறது. அந்த நிகழ்வில் பல்வேறு இசைக்கருவிகளின் ஒலிகளும் அவற்றின் லய ஒத்திசைவும் குறிப்பிடப்படுகின்றன.

> "குழல்வழி நின்றது யாழே யாழ்வழித் தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
> பின்வழி நின்றது முழவே முழவொடு ஒன்றி இசைத்தது ஆமந்திரிகை..."
>
> - (சிலப்பதிகாரம்: அரங்கேற்று காதை - 139-142)

இந்தப் பாடல் வரிகளில் குழல், யாழ், தண்ணுமை, முழவு, ஆமந்திரிகை போன்ற இசைக்கருவிகள் ஒழுங்குடன் இணைந்து ஒலிப்பதை ஆசிரியர் விளக்குகிறார். குறிப்பாக தண்ணுமை (தோல் கருவி) மற்றும் ஆமந்திரிகை (இடக்கை போன்ற தாளக் கருவி) ஆகியவற்றின் ஒலிகள் ஒருங்கிணைந்து இசைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வரிகளில் “தகவு” என்ற சொல்லின் மூலம் கருவிகளின் ஒலி மற்றும் லய ஒழுங்கு குறிப்பிடப்படுகிறது. தாளக் கருவிகளில் உருவாகும் ஒலிகளை ஒழுங்கான லய அமைப்பில் வெளிப்படுத்துவது பற்றிய இந்த விளக்கம், பின்னர் உருவான சொல்கட்டு மற்றும் கொன்னக்கோல் மரபின் அடிப்படைத் தத்துவங்களுடன் தொடர்புடையதாக கருதப்படுகிறது. அதாவது, தாளக் கருவிகளின் ஒலிகளை மனிதக் குரல் மூலம் லயச் சொற்களாக வெளிப்படுத்தும் கொன்னக்கோல் நடைமுறையின் ஆரம்பக் கருத்துக்கள் இத்தகைய இலக்கியச் சான்றுகளில் காணப்படுகின்றன (இளங்கோ அடிகள்).

**பரத முனியின் நாட்டிய சாஸ்திரம்**

இந்தியக் கலை மரபின் தொன்மையான இலக்கண நூல்களில் முக்கியமானதாக பரத முனி இயற்றிய நாட்டிய சாஸ்திரம் விளங்குகிறது. கி.மு. 200 முதல் கி.பி. 200 வரையிலான காலப்பகுதியில் உருவானதாகக் கருதப்படும் இந்நூல், இசை, நடனம் மற்றும் நாடகக் கலைகளின் அடிப்படை கோட்பாடுகளை விரிவாக விளக்குகிறது. நாட்டிய சாஸ்திரத்தில் கலை வெளிப்பாட்டின் முக்கிய கூறுகளாக ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம் மற்றும் சாத்த்விகம் என்ற நான்கு வகை அபிநயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதில் வாசிகம் (வாக்கு/சொல்) என்பது கலை வெளிப்பாட்டின் முக்கிய கூறாகக் கருதப்படுகிறது.

நாட்டிய சாஸ்திரத்தில் தாளம், லயம் மற்றும் இசைக் கட்டமைப்புகள் பற்றிய விளக்கங்களுடன், ஒலிகளை வெளிப்படுத்தும் பாடாட்சரங்கள் (Syllables) பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடாட்சரங்கள் இசை மற்றும் தாள ஒலிகளை வாக்கின் மூலம் வெளிப்படுத்தும் ஒரு முறையாகக் கருதப்படுகின்றன. இதில் க, த, ர, ண போன்ற

ஒலியெழுத்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை ஒலிச் சொற்கள் பின்வரும் காலங்களில் தாள ஒலிகளை விளக்கும் சொல்கட்டு மரபு உருவாகுவதற்கான அடிப்படையாக அமைந்தன.

நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படும் பாடாட்சரங்களும் வாக்கு மூலம் லயத்தை வெளிப்படுத்தும் முறைகளும், பின்னர் தென்னிந்திய இசை மரபில் உருவான சொல்கட்டு மற்றும் கொன்னக்கோல் நடைமுறைகளுக்கு கோட்பாட்டு அடித்தளமாக விளங்குகின்றன. இதன் மூலம், லயத்தை வாக்கின் மூலம் வெளிப்படுத்தும் மரபு பண்டைய காலத்திலேயே இருந்ததை அறிய முடிகிறது (பரத முனி).

**திருமந்திரம் (பிரபஞ்ச லயம்)**

தமிழ் சைவ சித்தாந்த இலக்கியங்களில் முக்கியமான நூலாக விளங்கும் திருமந்திரம், லயம் மற்றும் நாதத்தின் ஆன்மீகப் பொருளை விளக்கும் சிறப்புமிக்க நூலாகும். திருமூலர் இயற்றிய இந்நூலில், ஒலி (நாதம்) மற்றும் அசைவு (லயம்) ஆகியவை பிரபஞ்சத்தின் அடிப்படை இயக்கமாகக் கருதப்படுகின்றன. இந்தக் கருத்தை வெளிப்படுத்தும் வகையில் திருமூலர் பின்வருமாறு கூறுகிறார்:

> "நாத முடிவிலே நல்நட மாடிட
>
> நாத முடிவுற்ற நற்சிவ மாமே…"
>
> - (திருமந்திரம்: 606)

இந்தப் பாடல் வரிகளில், ஒலியின் உச்ச நிலையிலும் அதன் நிறைவிலும் இறைவனின் திருநடனம் நிகழ்கிறது என்று கூறப்படுகிறது. இதன் மூலம் நாதமும் லயமும் பிரபஞ்ச இயக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களாக விளக்கப்படுகின்றன.

திருமந்திரத்தில் காணப்படும் இந்தக் கருத்து, ஒலி மற்றும் லயத்தின் ஒருங்கிணைப்பை ஆன்மீக மற்றும் தத்துவ ரீதியாக விளக்குகிறது. இசை மற்றும் தாள ஒலிகளை மனிதக் குரலின் மூலம் வெளிப்படுத்தும் கொன்னக்கோல், நாதத்தையும் லயத்தையும் ஒருங்கிணைக்கும் கலை வடிவமாகப் புரிந்து கொள்ளப்படலாம். எனவே, நாதம் மற்றும் லயம் ஆகியவற்றின் தொடர்பை விளக்கும் திருமந்திரக் கருத்துகள், கொன்னக்கோலின் தத்துவ அடிப்படையை உணர்த்தும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன (திருமூலர்).

**லய மற்றும் மிருதங்கக் கோட்பாடுகள்**

கர்நாடக இசையில் தாளம் மற்றும் லய அமைப்புகள் மிருதங்கப் பயிற்சியின் முக்கியமான அடிப்படையாகக் கருதப்படுகின்றன. மிருதங்க வாசிப்பில் பயன்படுத்தப்படும் பல்வேறு லயக் கட்டமைப்புகள் மற்றும் சொல்கட்டு முறைகள் தாள அமைப்புகளை தெளிவாகப் புரிந்து கொள்ளவும், லயக் கணக்குகளை துல்லியமாகப் பயிற்சி செய்யவும் உதவுகின்றன (மங்குடி துரைராஜ ஐயர், 2009). மேலும், மிருதங்க இலக்கண நூல்களில் தாள வகைகள், லய அமைப்புகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் குறித்து விரிவான

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, லய அமைப்புகள் மற்றும் தாளக் கட்டமைப்புகள் இசை மற்றும் தாளக் கலைகளில் எவ்வாறு நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் இந்நூல்கள் தெளிவுபடுத்துகின்றன (சோமஸ்கந்த சர்மா, 2019).

படம் 1: கர்நாடக இசையில் பயன்படும் முக்கிய தாளக் கருவிகள் – மிருதங்கம், கஞ்சிரா, கதம், மோர்சிங்

கர்நாடக இசை மரபில் லய அமைப்புகளை வெளிப்படுத்த பல்வேறு தாளக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக மிருதங்கம், கஞ்சிரா, கதம் மற்றும் மோர்சிங் ஆகிய கருவிகள் இசைக் கச்சேரிகளில் தாள ஒத்திசைவு மற்றும் லய நுட்பங்களை வெளிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மிருதங்கம் கர்நாடக இசையின் முதன்மைத் தாளக் கருவியாகக் கருதப்படுவதுடன், மற்ற தாளக் கருவிகளும் லய அமைப்புகளின் செறிவையும் தாள ஒழுங்கையும் வலுப்படுத்துகின்றன. இக்கருவிகளின் பயிற்சியில் சொல்கட்டு மற்றும் கொன்னக்கோல் போன்ற வாய்மொழி லய முறைகள் முக்கியமான அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன (Mangudi Durairaj Iyer, 2009) இவ்வகை தாளக் கருவிகளின் உதாரணங்கள் படம் 1-ல் காணப்படுகின்றன. இவ்வகை கோட்பாட்டு விளக்கங்கள், மிருதங்கப் பயிற்சியில் மட்டுமல்லாமல், கொன்னக்கோல் போன்ற லய வாய்மொழிக் கலைகளின் அடிப்படைப் புரிதலுக்கும் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

அட்டவணை 2: கொன்னக்கோல் பயிற்சியில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் அவற்றின் பயன்பாடு

| **வாத்தியம்** | **பயன்பாடு** | **குறிப்புகள்** |
|---|---|---|
| மிருதங்கம் | ஒத்துழைப்பு மற்றும் பதிலடி | கொன்னக்கோல் சொற்கள் மிருதங்க வாசிப்புடன் ஒத்திசைவாகப் பயிற்சிக்கப்படுகின்றன. |
| கஞ்சிரா | லய வேகப் பயிற்சி | சிறிய தாளக் கருவி; கொன்னக்கோல் வேகப் பயிற்சிக்கு உதவுகிறது. |
| மோர்சிங் | ஒலி ஒத்திசைவு | வாய்மொழிச் சொற்கள் மற்றும் ஒலி அதிர்வுகளை ஒப்பிட்டு பயிற்சி செய்ய பயன்படுகிறது. |
| மனோத்தாளம் | உள்ளார்ந்த லயப் பயிற்சி | எந்த கருவியும் இன்றி உள்ளார்ந்த லய உணர்வை வளர்க்க உதவுகிறது. |
| மின்தாளப் பெட்டி | நேரக் கட்டுப்பாடு | தாளச் சுழற்சியை நிலைத்திருக்க உதவும் கருவி. |
| ஸ்ருதி பெட்டி | பின்னணி ஒலி | லயநிலை மற்றும் ஸ்ருதி நிலையை நிலைத்திருக்க பயன்படுகிறது. |
| கை தாளம் | உடல் ஒத்துழைப்பு | கை தட்டும் முறைகள் மூலம் தாளச் சுழற்சி உணர்வு வளர்க்கப்படுகிறது. |

கொன்னக்கோல் பயிற்சியில் தாள உணர்வையும் லயத் துல்லியத்தையும் வளர்த்துக் கொள்ள பல்வேறு தாளக் கருவிகளும் துணை கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அதே நேரத்தில், கொன்னக்கோல் பயிற்சியில் கருவி வாசிப்புடன் மட்டுமல்லாமல், லயக் கணக்குகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவும் சில துணை கருவிகளும் பயிற்சி முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, மின்தாளப் பெட்டி தாளச் சுழற்சியை நிலைத்திருக்க உதவுகிறது; ஸ்ருதி பெட்டி பின்னணி ஒலியை வழங்கி லயநிலையை நிலைத்திருக்கச் செய்கிறது; கைத் தாளம் தாளச் சுழற்சியை உடலின் மூலம் உணர உதவுகிறது. மேலும், எந்த கருவியும் இன்றி மனத்தில் லயத்தை உணர்ந்து கூறும் மனோத்தாளம் போன்ற பயிற்சிகள் உள்ளார்ந்த லய உணர்வை வளர்க்க உதவுகின்றன. இவ்வாறு கொன்னக்கோல் பயிற்சியில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் அட்டவணை 2-ல் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.

**இசையின் பண்பாட்டு பரிமாணம்**

இசை என்பது கலை வடிவமாக மட்டுமல்லாமல், மனிதர்களின் சமூக, பண்பாட்டு மற்றும் மணவியல் வளர்ச்சியுடன் தொடர்புடைய ஒரு முக்கியமான கூறாகவும் விளங்குகிறது. இசை மனிதர்களின் உணர்வுகள், சிந்தனை மற்றும் சமூக உறவுகளை வடிவமைக்கும் ஒரு பண்பாட்டு வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. இசை மற்றும் மனித தன்மைகள் இடையிலான தொடர்பை ஆராய்ந்த ஆய்வுகள், இசையின் சமூக மற்றும் மனவியல் தாக்கங்களை வெளிப்படுத்துகின்றன (Suganya, 2020).

மேலும், பாரம்பரிய இசைக் கருவிகள் மற்றும் அவற்றின் வரலாற்றுப் பின்னணி குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், இசை மரபின் பண்பாட்டு தொடர்ச்சியையும் அதன் சமூகப் பயன்பாடுகளையும் விளக்குகின்றன. குறிப்பாக, பாரம்பரிய இசைக் கருவிகள் வழியாக இசை மரபு தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு பரம்பரையாக பரவி வந்துள்ளதையும் இவ்வாய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (Suganya, 2021).

**நடுக்காலப் பரிணாமம்: திருப்புகழின் பங்களிப்பு**

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் பாடல்கள் தென்னிந்திய இசை மற்றும் லய மரபில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக, ‘சந்தம்’ எனப்படும் சிக்கலான லயக் கட்டமைப்புகளை தமிழ் பாடல் வடிவில் மிகத் திறமையாக அமைத்ததன் மூலம், லயப் பயிற்சிக்கும் தாள உணர்வுக்கும் முக்கிய பங்களிப்பை அவர் வழங்கினார். திருப்புகழ் பாடல்களில் காணப்படும் ஒலிச் சொற்கள் மற்றும் சந்த அமைப்புகள் லயத்தின் துல்லியத்தையும் வேகத்தையும் வெளிப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளன.

“தத்தத்தன தத்தத்தன தத்தத்தன

ISSN: 2582-9513

தத்தத்தன தத்தத்தன தத்தத்தன – தனதான…"

இவ்வகை சந்த அமைப்புகள் சதுஸ்ர (4 அலகு) மற்றும் மிஸ்ர (7 அலகு) போன்ற லய நடைகளின் அழகியல் வடிவங்களைக் கொண்டுள்ளன. இங்கு பயன்படுத்தப்படும் ஒலிச் சொற்கள் தாள அமைப்புகளின் ஓட்டத்தையும் லய ஒழுங்கையும் வெளிப்படுத்துகின்றன. வெறும் ஒலிச் சொற்கள் மற்றும் சொற்களஞ்சியத்தின் மூலம் லயத்தின் செறிவையும் பிரம்மாண்டத்தையும் வெளிப்படுத்திய இந்தப் பாடல்கள், பின்வரும் காலங்களில் உருவான சொல்கட்டு மற்றும் கொன்னக்கோல் மரபுகளுடன் நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன. திருப்புகழ் பாடல்களில் காணப்படும் சந்த அமைப்புகள் லய உணர்வை வளர்க்கும் ஒரு முக்கியமான பயிற்சி வடிவமாகக் கருதப்படுகின்றன. இவ்வகை சிக்கலான லயக் கட்டமைப்புகள் இன்று பல கொன்னக்கோல் கலைஞர்களால் பயிற்சி மற்றும் லயப் புரிதலை மேம்படுத்தும் ஒரு முக்கிய ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், அருணகிரிநாதரின் திருப்புகழ் தமிழிசை மரபில் லயக் கலையின் வளர்ச்சிக்கும், பின்னர் உருவான கொன்னக்கோல் நடைமுறைக்கும் முக்கிய பங்களிப்பை வழங்கியதாகக் கருதப்படுகிறது.

**கொன்னக்கோலின் கோட்பாட்டு அடிப்படைகள்**

கொன்னக்கோல் கலை தென்னிந்திய இசை மரபில் லயத்தை வாய்மொழியாக வெளிப்படுத்தும் ஒரு தனித்துவமான முறையாகும். இது தாள அமைப்புகள், லய நடைகள் மற்றும் கணித ரீதியான ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. கர்நாடக இசையில் காணப்படும் தாள மற்றும் லயக் கோட்பாடுகள் கொன்னக்கோலின் நடைமுறைகளுக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன. குறிப்பாக சொற்கட்டு (Solkattu), காலப் பிரமாணம் (Tempo), யதி (Yati), கோர்வை (Korvai) போன்ற கூறுகள் இந்தக் கலையின் முக்கியமான இலக்கணக் கூறுகளாக விளங்குகின்றன.

**சொற்கட்டு (Solkattu)**

கொன்னக்கோலின் அடிப்படை அலகு சொற்கட்டு ஆகும். இது தாளத்தின் மாத்திரைகள் அல்லது கால அலகுகளை ஒலிச் சொற்களாக மாற்றும் முறையாகும். தாளக் கருவிகளில் உருவாகும் ஒலிகளை மனிதக் குரலின் மூலம் வெளிப்படுத்தும் ஒரு லய மொழியாக சொற்கட்டு விளங்குகிறது. இதன் மூலம் தாள அமைப்புகளையும் லய நடைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. கர்நாடக இசையில் காணப்படும் பல்வேறு லய நடைகள் (Gati / Nadai) சொற்கட்டு வடிவில் பின்வருமாறு வெளிப்படுகின்றன:

- திஸ்ரம் (3 அலகுகள்) – தகிட்ட (Tha Ki Ta)
- சதுரஸ்ரம் (4 அலகுகள்) – தகதிமி (Tha Ka Dhi Mi)
- கண்டம் (5 அலகுகள்) – தகதகிட (Tha Ka Tha Ki Ta)
- மிஸ்ரம் (7 அலகுகள்) – தகதிமி தகிட்ட (Tha Ka Dhi Mi Tha Ki Ta)
- சங்கீர்ணம் (9 அலகுகள்) – தகதிமி தகதகிட (Tha Ka Dhi Mi Tha Ka Tha Ki Ta)

இந்த ஒலிச் சொற்கள் தாளக் கணக்குகளையும் லயப் பிரிவுகளையும் வெளிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, சொற்கட்டு கொன்னக்கோலின் அடிப்படை மொழியாகக் கருதப்படுகிறது.

**சொல்கட்டு மற்றும் லய மொழி**

அட்டவணை 3: கொன்னக்கோலில் பயன்படுத்தப்படும் சொல்கட்டு மற்றும் லய அமைப்புகள்

| **லய நடை** | **அலகுகள்** | **பொதுவான சொல்கட்டு** | **பயன்பாடு** |
|---|---|---|---|
| திஸ்ர நடை | 3 | த கி ட (Tha Ki Ta) | வேகமான லய மாற்றங்கள் மற்றும் தாள அலங்காரங்களில் பயன்படுத்தப்படுகிறது. |
| சதுரஸ்ர நடை | 4 | த க தி மி (Tha Ka Dhi Mi) | கர்நாடக இசையின் அடிப்படை லய நடை; பெரும்பாலான தாளங்களில் பயன்படுகிறது. |
| கண்ட நடை | 5 | த க த கி ட (Tha Ka Tha Ki Ta) | சிக்கலான லய அமைப்புகள் மற்றும் கணிதத் தாளக் கட்டமைப்புகளில் பயன்படுகிறது. |
| மிஸ்ர நடை | 7 | த க தி மி த கி ட (Tha Ka Dhi Mi Tha Ki Ta) | விரிவான லயக் கோவைகள் மற்றும் கோர்வைகளில் பயன்படுகிறது. |
| சங்கீர்ண நடை | 9 | த க தி மி த க த கி ட (Tha Ka Dhi Mi Tha Ka Tha Ki Ta) | மேம்பட்ட லய அமைப்புகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படுகிறது. |

தென்னிந்திய இசை மரபில் லயத்தை வெளிப்படுத்தும் முக்கியமான வாய்மொழி அமைப்பாக சொல்கட்டு கருதப்படுகிறது. தாளக் கருவிகளில் உருவாகும் ஒலிகளை மனிதக் குரலின் மூலம் ஒலிச் சொற்களாக வெளிப்படுத்தும் இந்த லய மொழி, மிருதங்கம் மற்றும் பிற தாளக் கலைஞர்களின் பயிற்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. சொல்கட்டு முறையின் மூலம் தாள அமைப்புகளையும் லயக் கணக்குகளையும் தெளிவாகக் கற்றுக்கொள்ள முடியும் (Nelson, 1991).

கொன்னக்கோல் கலைவில் லய அமைப்புகள் நடை (Nadai / Gati) அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. தாளத்தின் கால அலகுகளை ஒலிச் சொற்களாக வெளிப்படுத்தும் இந்த முறையே சொல்கட்டு (Solkattu) எனப்படுகிறது. திஸ்ர, சதுரஸ்ர, கண்ட, மிஸ்ர மற்றும் சங்கீர்ணம் போன்ற லய நடைகள் கர்நாடக இசையில் முக்கியமான லய அமைப்புகளாகக் கருதப்படுகின்றன. இந்நடைகள் தாளக் கணக்குகளையும் லய

ISSN: 2582-9513

மாற்றங்களையும் தெளிவாக வெளிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன (Nelson, 1991) கொன்னக்கோலில் பயன்படும் முக்கிய சொல்கட்டு வடிவங்களும் அவற்றின் லய அமைப்புகளும் அட்டவணை 3-ல் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தென்னிந்திய இசையின் லய மொழியாக விளங்கும் சொல்கட்டு பற்றிய ஆய்வுகள், தாளக் கோட்பாடுகள் மற்றும் லய அமைப்புகளை முறையாக விளக்குகின்றன. குறிப்பாக, சொல்கட்டு மூலம் லயக் கட்டமைப்புகள் மற்றும் தாளக் கணிதம் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும் இவ்வாய்வுகள் எடுத்துரைக்கின்றன (Nelson, Music Academy Journal).

**காலப் பிரமாணம் (Tempo)**

கொன்னக்கோலில் ஒரு சொற்கட்டை பல்வேறு வேகங்களில் உச்சரிப்பது முக்கியமான பயிற்சி முறையாகும். இதன் மூலம் லயத்தின் துல்லியத்தையும் வேக கட்டுப்பாட்டையும் கலைஞர்கள் வளர்த்துக் கொள்கின்றனர். பொதுவாக ஒரே சொற்கட்டை மூன்று வேகங்களில் பயிற்சி செய்வது வழக்கமாக உள்ளது. அவை:

- பிரதம காலம் (First Speed) – இயல்பான வேகம்
- துவிதிய காலம் (Second Speed) – இரட்டிப்பு வேகம்
- திருதிய காலம் (Third Speed) – நான்கு மடங்கு வேகம்

இந்த வேக மாற்றங்கள் லய அமைப்புகளின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்த உதவுகின்றன.

**யதி (Yati) மற்றும் கோர்வை (Korvai)**

கொன்னக்கோலில் லய அமைப்புகளை அழகாக வடிவமைப்பதற்காக யதி மற்றும் கோர்வை போன்ற கோட்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. யதி என்பது லய அமைப்புகளின் வடிவியல் (geometric) அமைப்பைக் குறிக்கிறது. இதில் ஒலிகளின் எண்ணிக்கை அல்லது அமைப்பு ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் அதிகரிக்கவோ குறையவோ செய்யப்படுகிறது.

**உதாரணமாக:**

- கோபுச்ச யதி (Gopuccha Yati) – பெரிய அமைப்பிலிருந்து படிப்படியாக சிறிதாகக் குறையும் வடிவம்
- ஸ்ரோதோவக யதி (Srotovaha Yati) – சிறிய அமைப்பிலிருந்து படிப்படியாக விரிவடையும் வடிவம்

அதேபோல் கோர்வை என்பது தாளச் சுற்றின் முடிவில் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் லயக் கட்டமைப்பாகும். இது பொதுவாக ஒரு குறிப்பிட்ட கணித ஒழுங்கில் அமைந்து, தாளத்தின் முடிவை அழகாக நிறைவு செய்கிறது.

**நவீன கால வளர்ச்சி மற்றும் உலகளாவிய விரிவாக்கம்**

ISSN: 2582-9513

கொன்னக்கோல் தென்னிந்திய இசை மரபில் நீண்ட காலமாக தாள மற்றும் லயப் பயிற்சிக்கான ஒரு முக்கிய கற்பித்தல் முறையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டு வரை இது பெரும்பாலும் கற்பித்தல் கருவியாக (Pedagogical Tool) மட்டுமே பயன்பட்டது. மிருதங்கம் போன்ற தாளக் கருவிகளை கற்றுக்கொடுக்கும் போது, தாள அமைப்புகளையும் லயக் கணக்குகளையும் மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளச் செய்வதற்காக கொன்னக்கோல் பயன்பட்டது (Nelson, 1991; Mangudi Durairaj Iyer, 2009).

பின்னர் காலப்போக்கில், இந்த வாய்மொழி லய மரபு தனித்துவமான மேடை கலை வடிவமாகவும் உலகளாவிய இசை மேடைகளில் அறிமுகமான கலை வடிவமாகவும் வளர்ச்சி பெற்றது.

**தனி மேடைக்கலையாக உருமாற்றம்**

19ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில், பல லய மேதைகள் கொன்னக்கோலை தனித்துவமான மேடை கலை வடிவமாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தனர். குறிப்பாக மன்னார்குடி பக்கிடியா பிள்ளை (1866–1937) கொன்னக்கோலை ஒரு தனி மேடை நிகழ்ச்சி (Solo Performance) வடிவமாக வளர்த்த முக்கிய கலைஞர்களில் ஒருவர். அவரின் லயத் திறமையும் சொல்கட்டு அமைப்புகளின் சிக்கலான வடிவங்களும் கொன்னக்கோலை தாளக் கருவிகளுக்கு இணையாக மதிக்கப்படும் ஒரு கலை வடிவமாக உயர்த்தின.

அவரின் பின்பு நீடாமங்கலம் தவில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற தாளக் கலைஞர்கள் கொன்னக்கோலின் லயக் கோட்பாடுகளை மேம்படுத்தி, அதை மேலும் நுட்பமான மேடை கலை வடிவமாக வளர்த்தனர். இவ்வகை கலைஞர்களின் பங்களிப்பால், கொன்னக்கோல் மிருதங்கம், கடம், கஞ்சிரா போன்ற தாளக் கருவிகளுடன் இணைந்து நிகழ்த்தப்படும் ஒரு முக்கிய கலை வடிவமாக உருவெடுத்தது.

**உலகளாவிய தாக்கம்**

20ஆம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் கொன்னக்கோல் இந்திய எல்லைகளைத் தாண்டி உலக இசை மேடைகளில் அறிமுகமானது. குறிப்பாக அதன் கணித ரீதியான லய அமைப்புகள் மற்றும் துல்லியமான தாளக் கட்டமைப்புகள் மேற்கத்திய இசைக் கலைஞர்களின் கவனத்தை ஈர்த்தன.

மேற்கத்திய ஜாஸ் இசை உலகில், ஜான் மெக்லாலின் (John McLaughlin) போன்ற கலைஞர்கள் தென்னிந்திய லய மரபுகளின் மீது ஆழ்ந்த ஆர்வம் கொண்டனர். அவர் உருவாக்கிய Mahavishnu Orchestra போன்ற இசைக் குழுக்களில் இந்திய லய அமைப்புகள் மற்றும் கொன்னக்கோல் கூறுகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் கொன்னக்கோல் உலக இசை மேடைகளில் புதிய பரிமாணத்தை அடைந்தது. அதேபோல், சமகாலத்தில் பல சர்வதேச இசைக் கல்வி நிறுவனங்களிலும் கொன்னக்கோல் கற்பித்தல் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக அமெரிக்காவில் உள்ள Berklee College of Music போன்ற கல்வி

ISSN: 2582-9513

நிறுவனங்களில், தாள அறிவை வளர்க்கவும் லய உணர்வை மேம்படுத்தவும் கொன்னக்கோல் ஒரு அடிப்படைப் பாடமாக கற்பிக்கப்படுகிறது.

இந்த வளர்ச்சிகளின் மூலம், பாரம்பரியமாக தென்னிந்திய இசை மரபில் உருவான கொன்னக்கோல் இன்று உலகளாவிய இசை மரபில் ஒரு முக்கியமான லய வாய்மொழிக் கலையாகத் திகழ்கிறது.

**முடிவுரை**

கொன்னக்கோல் தென்னிந்திய இசை மரபில் உருவாகி வளர்ந்த ஒரு முக்கியமான லய வாய்மொழிக் கலை வடிவமாகும். அதன் வேர்கள் பண்டைய இலக்கியங்களிலும் இசை மரபுகளிலும் காணப்படுகின்றன. நாட்டிய சாஸ்திரம், சிலப்பதிகாரம் போன்ற தொன்மையான நூல்கள் தாளம் மற்றும் லயக் கோட்பாடுகளை விளக்குகின்றன; அதேபோல் திருப்புகழ் பாடல்களில் காணப்படும் சந்த அமைப்புகள் லய உணர்வை மேம்படுத்துகின்றன. இவ்வகை மரபுகளின் தொடர்ச்சியாக கொன்னக்கோல் வாய்மொழி லயக் கலையாக வளர்ச்சி பெற்றது.

அடுத்தடுத்த காலங்களில் இது தாளக் கலைஞர்களுக்கான பயிற்சி முறையைத் தாண்டி தனித்துவமான மேடை கலை வடிவமாகவும், உலக இசை மேடைகளிலும் பரவலாக அறிமுகமானது. மனிதக் குரலின் மூலம் லயத்தை வெளிப்படுத்தும் இக்கலை, லயத்தின் கணிதத் துல்லியத்தையும் கலைநயத்தையும் ஒருங்கிணைக்கும் தனித்துவமான வடிவமாகத் திகழ்கிறது. எனவே, பண்டைய இலக்கிய மரபிலிருந்து நவீன உலக இசை வரை பரிணமித்த கொன்னக்கோல், தென்னிந்திய இசை மரபின் லய ஞானத்திற்கான முக்கியச் சான்றாக விளங்குகிறது.

**மேற்கோள்கள்**

1. Durairaj Iyer Mangudi, (2009), Mrithanga Swapodhini Moorthy Publications, Chennai, India.
2. Somaskandha Sharma, (2019) Mrithanga Sangeetha Sasthiram Ramanadhan Academy Fine Arts Veliyeedu, Chennai, India.
3. Suganya, A., (2020) 'Music and Personality' A Study of Cultural Musicology Based on the Art of Music in the Socio-Psychological Deck, International Research Journal of Tamil, 2(4), 1-6. https://doi.org/10.34256/irjt2041
4. Suganya, A., (2021) A Historical Perspective of Mangalavattiyam, International Research Journal of Tamil, 3(2), 1-10. https://doi.org/10.34256/irjt2121
5. கிரிதரன் சர்மா, ந. (2022). கர்நாடக இசைக் கச்சேரிகளில் மிருதங்கத்தின் முக்கியத்துவம். International Research Journal of Tamil.

PRANAV JOURNAL OF FINE ARTS

ISSN: 2582-9513

6. சுஜாதா நிரஞ்சன், ப. (2021). கர்நாடக இசையில் வயலின் வாசிப்பு முறைகள். Shanlax International Journal of Tamil Research.
7. ராமநாதன், எஸ். (2018). கர்நாடக இசையில் தாளக் கோட்பாடுகள் மற்றும் லய அமைப்புகள். Journal of the Music Academy (Madras).
8. பாலசுப்ரமணியம், எஸ். (2019). மிருதங்க வாசிப்பில் சொல்கட்டு மரபும் அதன் பயன்பாடும். Shanlax International Journal of Arts, Science and Humanities.
9. சந்திரசேகரன், கே. (2020). கர்நாடக இசையில் தாளம் மற்றும் லயப் பயிற்சி முறைகள். International Journal of Tamil Studies.திருச்சி சங்கரன் – தென்னிந்திய மிருதங்க வாசிப்பு (1994).
10. நெல்சன், டேவிட் பி. (தமிழாக்கம்). சொல்கட்டு மற்றும் தென்னிந்திய லய மொழி. Music Academy Journal.
11. டேவிட் நெல்சன் – சொல்கட்டு கையேடு: தென்னிந்திய இசையின் லய மொழிக்கு அறிமுகம் (1991)
12. ராபர்ட் இ. பிரவுன் – மிருதங்கம்: தென்னிந்திய தாளவாத்யக் கலையின் ஆய்வு (1965)
13. இளங்கோ அடிகள். சிலப்பதிகாரம். – Contains descriptions of music, dance, rhythmic patterns, and performance traditions.
14. பரத முனி. நாட்டிய சாஸ்திரம். – Explains tala, rhythm cycles, and performance theory.
15. விபுலானந்தர், சுவாமி. (1947). யாழ் நூல்.
16. காரைக்குடி ஆர். மணி – லயமணி லயம் (மாசிகம்)